தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

திணை

Bulletin of Tamil Heritage Foundation international - THFi

ஜூன் மாதம் 2021
மடல் 13

பொறுப்பாசிரியர்:
குமரன் சுப்ரமணியன் (ஜெர்மனி)

websites : http://www.tamilheritage.org

https://academy.tamilheritage.org/

Mobile App : Tamil Heritage Foundation

Google Groups : Mintamil Google Group

facebook :
Tamil Heritage Foundation
THF Student Heritage Network
THFMinTamil
Research - Korea and India
Der Kural Des Thiruvalluvar
Subashini THF

youtube:
https://www.youtube.com/thfichannel

E-mail: mythforg@gmail.com

THFi - HQ : Germany
Branches : India, Srilanka, Malaysia, Denmark, Norway, France, USA.

நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்

வீடில்லை நட்பாள் பவர்க்கு.

*(அதிகாரம்: நட்பாராய்தல் – குறள் 791)*



அனைவரையும் தமிழ் மரபு அறக்கட்டளையின் 'திணை' மாதாந்திர செய்தி மடலின் வழியாகச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

உலகம் முழுவதும் தற்சமயம் கொரோனா தொற்று ஓரளவிற்குக் கட்டுப்பாட்டிற்குள் வந்திருக்கும் சூழலில் நாம் இருக்கின்றோம். விரிவான வகையில் தடுப்பூசிகள் பொதுமக்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் இந்த மாற்றத்தைக் காண முடிகிறது. இதுவரை கொரோனாவிற்கு எதிரான தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்கள் தடுப்பூசியின் முக்கியத்துவத்தை உணர்ந்து தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்ள வேண்டும் என்று தமிழ் மரபு அறக்கட்டளை பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிறது.

ஜூன் மாத திசைக்கூடல் நிகழ்ச்சி வரலாறு, இயற்கை பாதுகாப்பு என்ற வகையில் அமைந்திருந்தது. வரலாற்றுத் துறையில் நீண்ட காலம் பயணித்து வரும் முனைவர் மு. ராஜேந்திரன் இ.ஆ.ப., மருத்துவர் இரா. கலைக்கோவன், கரந்தை ஜெயக்குமார் ஆகியோர் வரலாற்று செய்திகளை திசைக்கூடல் நிகழ்ச்சிகளின் வழி நம்முடன் பகிர்ந்து கொண்டனர். முக்கிய வரலாற்றுத்

தகவல்களை உள்ளடக்கிய இந்த உரைகள் வீடியோ பதிவுகளாக நமது வலைப்பக்கத்தில் இடம்பெறுகின்றன. உரைகளை நேரலையில் பார்க்கத் தவறியவர்கள் இந்த இதழில் வழங்கப்பட்டுள்ள யூடியூப் தொடர்பு வழியாக அவற்றை உலகின் எப்பகுதியிலிருந்தும் கண்டு மகிழலாம். பயனுறலாம்.




'நீரும் மறைநீரும்' என்ற தலைப்பில் எழுத்தாளர் கோ. லீலா அவர்களது உரை இயற்கை பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சியாக அமைந்து சிறப்பு சேர்த்தது. நாம் உணர்ந்தும் உணராமலும், அறிந்தும் அறியாமலும் நீரை பல்வேறு வகையில் சேதப் படுத்துகின்றோம்; முறையாகப் பயன்படுத்தத் தெரியாமல் இருக்கின்றோம். இந்த உரை நமக்கு தெளிவை ஏற்படுத்தி நீர் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு செய்திகளை நமக்களித்தது.




கொரோனா தமிழகத்தில் கடந்த ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மாதங்களில் மிகத் தீவிரமாக தாக்கிய காலகட்டங்களில் பாதிக்கப்பட்டோரில் கலைஞர்களும் மாற்றுத்திறனாளிகளும் மிக மோசமாக பாதிக்கப்பட்டனர் என்பதை யாவரும் அறிவோம். அந்த வகையில் பாதிக்கப்பட்ட கலைஞர்களுக்கு உதவும் நோக்கில் நாகர்கோவில் பகுதியில் அமைந்துள்ள முரசு கலை குழுவினருக்கு இந்திய ரூபாய் 13,500/- மற்றும் மனிதநேய அனைத்து வகை மாற்றுத் திறனாளி நலவாழ்வு சங்க அமைப்பிற்கு ரூபாய் 13,500/- தமிழ் மரபு அறக்கட்டளை நன்கொடையாகத் திரட்டி வழங்கினோம். இந்தச் சிறிய உதவி அவர்களுக்கு நிச்சயம் பலனளிக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.




26.06.2021, சனிக்கிழமை காலை 900 மணியளவில், சென்னை, திருநகர் பகுதியில் துப்பரவு பணிகளை செய்துவரும் 10 க்கும் துப்புரவு களப்பணியாளர்கள் மற்றும் வீட்டு வேலை செய்யும் பெண்மணிகள் அனைவருக்கும் கொரோனா நிவாரணப் பொருட்கள் அரிசி, மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வு திருநகர் குடியிருப்போர் சங்க தலைவர் திரு. மோகன் அவர்கள் தலைமையில் நான் (மு. மாரியப்பன்) உட்பட திருநகர் குடியிருப்போர் சங்க நிர்வாகிகள் திரு. ஜெயராமன், திரு. இராசாமணி, திரு. தனசேகரன் ஆகியோர்கள் கலந்து கொண்டு நிவாரணப் பொருட்களை வழங்கினார்கள்.

தமிழ் மரபு அறக்கட்டளை முன்னெடுக்கும் வரலாற்றுப் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளில் நீங்களும் இணைவீர். தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு உங்களை அன்புடன் வரவேற்கின்றது.

தமிழால் இணைவோம்!

**அன்புடன்**
**முனைவர் க.சுபாஷிணி**

# தமிழ் மரபு அறக்கட்டளையின் 2021 ஜூன் மாத நிகழ்வுகள்

## திசைக் கூடல் – வாராந்திர உரை நிகழ்ச்சி

| தேதி | நேரம் | கிழமை | உரையாளர் | உரை தலைப்பு |
|---|---|---|---|---|
| 06/6/2021 | 6:00 PM | ஞாயிறு | மருத்துவர் இரா. கலைக்கோவன் | வரலாறு – நீங்களும் நானும் https://youtu.be/ap_qrwXPGAc |
| 13/6/2021 | 6:00 PM | ஞாயிறு | எழுத்தாளர் கோ. லீலா | நீரும் மறைநீரும் https://youtu.be/0mkWN4OrK74 |
| 20/6/2021 | 6:00 PM | ஞாயிறு | கரந்தை ஜெயக்குமார் | கரந்தைப் புலவர் கல்லூரியின் தோற்றமும் வளர்ச்சியும் https://youtu.be/YT8qIy5dccM |
| 27/6/2021 | 6:00 PM | ஞாயிறு | முனைவர் மு. ராஜேந்திரன் இ.ஆ.ப. | இந்தியாவின் முதல் சுதந்திரப் போர் https://youtu.be/x_l98Feiztw |

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு
திணை
Bulletin of Tamil Heritage Foundation international - THFi

# திசைக் கூடல் – வாராந்திர உரை நிகழ்ச்சி

## வரலாறு – நீங்களும் நானும்

### மருத்துவர் இரா. கலைக்கோவன்

**திசைக் கூடல் நிகழ்வு #213**




ஜூன் – 6, 2021 – ஞாயிறு – இரவு 06:00 இந்திய நேரம்

காணொளி : https://youtu.be/ap_qrwXPGAc

# நீரும் மறைநீரும்

## எழுத்தாளர் கோ. லீலா

### திசைக் கூடல் நிகழ்வு #214




ஜூன் – 13, 2021 – ஞாயிறு – இரவு 06:00 இந்திய நேரம்

காணொளி : https://youtu.be/0mkWN4OrK74

# கரந்தைப் புலவர் கல்லூரியின் தோற்றமும் வளர்ச்சியும்

**கரந்தை ஜெயக்குமார்**

**திசைக் கூடல் நிகழ்வு #215**




ஜூன் – 20, 2021 – ஞாயிறு – இரவு 06:00 இந்திய நேரம்

காணொளி : [https://youtu.be/YT8qIy5dccM](https://youtu.be/YT8qIy5dccM)

# இந்தியாவின் முதல் சுதந்திரப் போர்

## முனைவர் மு. ராஜேந்திரன் இ.ஆ.ப.

### திசைக் கூடல் நிகழ்வு #216




ஜூன் – 27, 2021 – ஞாயிறு – இரவு 06:00 இந்திய நேரம்

காணொளி : [https://youtu.be/x_l98Feiztw](https://youtu.be/x_l98Feiztw)

# கொரோனா இடர் கால நிதி நல்கை

## தமிழ் மரபு அறக்கட்டளை சார்பில் கொரோனா நிவாரணப் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி

காணொளி : https://youtu.be/qNlHDw71CmA




26.06.2021, சனிக்கிழமை காலை 900 மணியளவில், சென்னை, திருநகர் பகுதியில் துப்பரவு பணிகளை செய்துவரும் 10 க்கும் துப்புரவு களப்பணியாளர்கள் மற்றும் வீட்டு வேலை செய்யும் பெண்மணிகள் அனைவருக்கும் கொரோனா நிவாரணப் பொருட்கள் அரிசி, மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வு திருநகர் குடியிருப்போர் சங்க தலைவர் திரு. மோகன் அவர்கள் தலைமையில் நான் (மு. மாரியப்பன்) உட்பட திருநகர் குடியிருப்போர் சங்க நிர்வாகிகள் திரு. ஜெயராமன், திரு. இராசாமணி, திரு. தனசேகரன் ஆகியோர்கள் கலந்து கொண்டு நிவாரணப் பொருட்களை வழங்கினார்கள்.

தமிழ் மரபு அறக்கட்டளையின் ஆய்வுப் பயணத்தில் நீங்களும் இணையுங்கள்.

## தமிழால் இணைவோம்!

---

### தமிழ் மரபு அறக்கட்டளை

https://tamilheritage.org/

---

### தமிழ் மரபு அறக்கட்டளையின் செய்திகள்

https://thf-news.tamilheritage.org/

---

### "கடிகை" – தமிழ் மரபு முதன்மைநிலை இணையக் கல்விக் கழகம்

https://academy.tamilheritage.org/

---

### சங்கம்பீடியா

https://sangathamizh.tamilheritage.org/

---

### தமிழ் மரபு அறக்கட்டளையின் நிகழ்ச்சிகள் – நாட்காட்டி:

https://tinyurl.com/THFi-Calendar

### நல்ல சிந்தனை:

கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ் ஞான்றுங்
குருத்திற் கரும்புதின் றற்றே;– குருத்திற்
கெதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ, என்றும்
மதுர மிலாளர் தொடர்பு.

– நாலடியார்

**பொருள்:**
கல்வியின் பயன் தெரிந்து உரிய நூல்களைக் கற்றுத் தெளிந்த மேலோருடைய நட்பு குருத்திலிருந்து கரும்புதின்னுதல் மேன்மேலும் இன்பம் தருவது போல என்றும் இனிமையுடையது. கல்வியின் இனிமையில்லாத கீழோருடைய தொடர்பு கரும்பை அடியிலிருந்து தின்னுதல் வரவர இன்பங் குறைந்து சென்றாற்போன்ற தன்மையுடையது.